பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்

கள்ளச்சாராயம் விற்பவர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தில் நடவடிக்கை: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, மே.18–

கள்ளச்சாராய வியாபாரிகள் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என போலீஸ் அதிகாரிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் காவல்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை உயர் அலுவலர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மாநில அளவில் மதுவிலக்கு தொடர்பாக தகவல் அளிக்க கட்டணமில்லா தொலைபேசி எண் 10581 பயன்பாட்டில் உள்ளதை, மக்களிடையே பிரபலப்படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மதுவிலக்கு அமலாக்க பிரிவின் உதவி போலீஸ் சூப்பிரண்டு, துணை போலீஸ் சூப்பிரண்டு ஆகியோரின் 'வாட்ஸ் அப்' எண்களை அறிவித்து, அதன் மூலம் பெறப்படும் புகார்களை கூடுதல் டி.ஜி.பி. (மதுவிலக்கு அமலாக்கம்) கண்காணித்து உடனுக்குடன் எடுக்கும் தொடர் நடவடிக்கையை உறுதி செய்ய வேண்டும். மேலும், இது தொடர்பான அறிக்கையை ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை உள்துறை செயலாளர் மூலம் முதலமைச்சரின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

திங்கட்கிழமைகளில் ஒருங்கிணைப்பு கூட்டம்

கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருட்கள் தடுப்பு சம்பந்தமாக கலெக்டர் தலைமையில் மாவட்ட அளவில் ஒவ்வொரு திங்கட் கிழமையும், மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் காவல் துறை, வருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் மாவட்ட மேலாளர் ஆகியோரை கொண்டு நடத்த வேண்டும் என்றும், இதுதொடர்பாக தலைமைச் செயலாளர் மாவட்ட கலெக்டர்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்கிட வேண்டும்.

கள்ளச்சாராயம், போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்து பள்ளி, கல்லூரிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுயஉதவி குழுவை சேர்ந்த மகளிர் மூலம் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

தொழிற்சாலைகளில் எரிசாராயம் மற்றும் மெத்தனால் பயன்பாட்டை கண்காணித்து, அது விஷ சாராயம் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படாமல் இருப்பதை, காவல் துறை மற்றும் உதவி ஆணையர் (கலால்) கண்காணித்திட வேண்டும் என்றும், மாநிலத்தின் எல்லை பகுதி, கடலோர மற்றும் மலைப்பகுதி மாவட்டங்களில், மாவட்ட அளவிலான மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் சிறப்பாக செயல்படும் உயர் அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை அந்த தொழிலில் இருந்து விடுவித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட அரசின் பல்வேறு வாழ்வாதார திட்டங்கள் மூலம் பயன்பெற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

கள்ளச்சாராயம் மற்றும் போதைப்பொருட்களை தொடர்ந்து விற்பனை செய்பவர்கள் மீது குண்டர் சட்டத்தில் பாரபட்சமின்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், குற்றத்தடுப்பு நடவடிக்கைகள், போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகள் குறித்து ஒவ்வொரு மாதமும், உள்துறை செயலாளர் மற்றும் டி.ஜி.பி. தலைமையில் காவல் கண்காணிப்பாளர்களின் மாதாந்திர கூட்டம் நடத்தப்பட்டு, காவல் துறையின் செயல்பாடுகளை கண்காணித்து, முதலமைச்சர் அலுவலகத்திற்கு அறிக்கை அளித்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

காவல் துறை அலுவலர்கள், தங்களது முழு திறமையையும், நீண்ட அனுபவத்தையும் பயன்படுத்தி, தமிழ்நாட்டு மக்களின் நன்மதிப்பை பெறும் வகையில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் தலைமைச் செயலாளர் இறையன்பு, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அரசு முதன்மைச் செயலாளர் அமுதா, டி.ஜி.பி. சைலேந்திர பாபு, கூடுதல் டி.ஜி.பி. (சட்டம்–ஒழுங்கு) சங்கர், மதுவிலக்கு அமலாக்கத்துறை கூடுதல் டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை ஆணையர் மதிவாணன், தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் மேலாண்மை இயக்குனர் சுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மோடி தலைமையில் டெல்லியில் 27ந் தேதி 'நிதி ஆயோக்' கூட்டம்: மாநில முதலமைச்சர்கள் பங்கேற்கிறார்கள்

புதுடெல்லி, மே.18–

பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் 27ந் தேதி 'நிதி ஆயோக்' கூட்டம் நடைபெறுகிறது. இதில் மாநில முதலமைச்சர்கள் கலந்துகொள்கிறார்கள்.

மத்திய திட்டக்குழுவுக்கு மாற்றாக 'நிதி ஆயோக்' என்ற அமைப்பினை மத்திய பா.ஜ.க. கூட்டணி அரசு கொண்டு வந்துள்ளது. இந்த அமைப்பின் தலைவராக பிரதமர் மோடி உள்ளார். துணைத்தலைவராக சுமன் பெரி இருக்கிறார். இதன் ஆட்சிமன்ற குழுவில் அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களும், யூனியன் பிரதேசங்களின் துணை நிலை கவர்னர்களும் இடம் பெற்றுள்ளனர்.

இதன் ஆட்சிமன்ற குழு கூட்டம் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டு, இது பிரதமர் மோடி தலைமையில் ஆகஸ்டு மாதம் 7ந் தேதி நடைபெற்றது.

இந்த ஆண்டு நிதி ஆயோக் ஆட்சிமன்ற குழு கூட்டம், மோடி தலைமையில் வரும் 27ந் தேதி டெல்லியில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களும் கலந்து கொள்கிறார்கள். மாநிலங்கள் தங்களுக்கானநிதி ஒதுக்கீடு தொடர்பாக பிரதமரிடம் கோரிக்கை வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில், மாநிலங்கள் வளர்ச்சி பெற கடுமையாக உழைக்க வேண்டும், 2047ம் ஆண்டுக்குள் வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற கனவை நிறைவேற்றுவதற்கு இலக்கு வைத்து பாடுபட வேண்டும் என்று பிரதமர் மோடி கேட்டுக்கொள்வார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கணேசபுரம் ரெயில்வே சுரங்கப்பாதையில் 4 வழிப்பாதையுடன் மேம்பாலம் அமைக்கும் பணி

சென்னை மாநகராட்சி கமிஷனர் ராதாகிருஷ்ணன் ஆய்வு

சென்னை, மே.18–

பெருநகர சென்னை மாநகராட்சி திரு.வி.க.நகர் மண்டலத்தில் பெரம்பூர் நெடுஞ்சாலையில் புளியந்தோப்பு பகுதியை இணைக்கும் வகையில் ஸ்டீபன்சன் சாலையில் ஓட்டேரி நல்லா கால்வாயின் குறுக்கே உள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு ரூ.43.46 கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட பாலமும், கணேசபுரம் ரெயில்வே சுரங்கப்பாதையின் மேல் ரூ.142 கோடி செலவில் 4 வழிப்பாதையுடன் புதிய ரெயில்வே மேம்பாலமும் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனரும், கூடுதல் தலைமை செயலாளருமான டாக்டர் ராதாகிருஷ்ணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, இணை கமிஷனர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், தலைமை என்ஜினீயர் (பொது) எஸ்.ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் உடன் சென்றனர். பின்னர் திரு.வி.க. நகர் மண்டலத்தில் நடந்த மாநகராட்சி அதிகாரிகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய அதிகாரிகள், சுகாதாரத்துறை அதிகாரிகள், மின்வாரியத்துறையினர் உள்ளிட்ட பல்வேறு துறையினர் கலந்து கொண்ட ஆய்வு கூட்டத்தில் மாநகராட்சி கமிஷனர் ராதாகிருஷ்ணன் திடீரென கலந்து கொண்டார். ஆய்வு கூட்டத்தில் கூறப்பட்ட கருத்துகளை அவர் கேட்டறிந்தார்.

UGRO CAPITAL

யு குரோ கேபிடல் லிமிடெட்

4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க்,
எல்பிஎஸ் சாலை, குர்லா, மும்பை 400070

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு இணைப்பு IV (விதி 8 (1)) (அசையாசொத்து)

கீழே கையொப்பமிட்டுள்ள யு குரோ கேபிடல் லிமிடெட், பதிவு அலுவலகம், 4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், எல்பிஎஸ் சாலை, குர்லா, மும்பை 400070ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (54 ஆப் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப கடன்தாரர்கள் **1. பேஷன் புட்வேர், 2. பயாஸ் ஷபியுல்லா, 3. அஸ்லாம் பேகம் சபியுல்லா** கடன் கணக்கு எண். LAN **HCFCHESEC00001016236** ஆகியோருக்கு அனுப்பிய 06.03.2023 தேதியிட்ட டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிட்டுள்ளபடி, 06.03.2023 அன்று வரை செலுத்த வேண்டிய தொகை **ரூ.29,68,763/– (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எழுநூற்று எண்பத்து மூன்று மட்டும்)** மேலும் வட்டியை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13 உப பிரிவு 4ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும், **16 மே, 2023** தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து யு குரோ கேபிடல் லிமிடெட்டுக்கு 06.03.2023 அன்று வரை செலுத்த வேண்டிய தொகை **ரூ.29,68,763/– (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எழுநூற்று எண்பத்து மூன்று மட்டும்)** மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

அசையா சொத்து விவரம்

அந்த அசையாச் சொத்துக்கள் அனைத்தும் கதவு எண். 11/4, வார்டு ஏ, பிளாக்–8, டி.எஸ். எண். 64, கிராமநத்தம் பழைய எஸ். எண். 117/1 பகுதி, நபிகள் நாயகம் தெரு, ஆற்காடு, வேலூர்–632503, எஸ்ஆர்ஓ: ஆற்காடு டவுன்

இடம்: வேலூர்
நாள் : 18.05.2023

ஒப்பம்/– வெங்கடேசன் G. (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
யு குரோ கேபிடல் லிமிடெட்

ஆன்லைன் இ– ஏல முறையில் சொத்து விற்பனை

kotak Kotak Mahindra Bank

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: எண். 185, 2வது தளம், அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை–600 006.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ– ஏல விற்பனை அறிவிப்பு

பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டினால் (பிஎச்எப்எல்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 03.02.2023 அன்று சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. திரு. சி. சரவணன் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண்.403HPV56271050 & 403TSH54744551, 403HSL54743781–ன்கீழ் 16.05.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.65,10,672/– (ரூபாய் அறுபத்தைந்து லட்சத்து பத்தாயிரத்து அறுநூற்று எழுபத்திரெண்டு மட்டும்) மற்றும் 17.05.2023 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 7.6.2023 நண்பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.37,00,000/– (ரூபாய் முப்பத்தேழு லட்சம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.3,70,000/– (ரூபாய் மூன்று லட்சத்து எழுபதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 6.6.2023 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்து விவரம் : அஞ்சலக முகவரி: மனை எண்.பி3, பிளாட் எண்.எப்–2, முதல் தளம், பிளாக் – பி, மயூர் பிளாட்ஸ், ராயல் கார்டன் விரிவு, வேங்கைவாசல், சென்னை – 600 073, குறிப்பாக மேலும் விரிவாக : 569 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட பிளாட் (பொதுப் பங்கு உட்பட), எண்.எப்–2, முதல் தளம், பிளாக் பி, ''மயூரா பிளாட்ஸ்'', மனை எண்.பி3, பிளாட் எண்.எப்–2, முதல் தளம், பிளாக் – பி, மயூரா பிளாட்ஸ், ராயல் கார்டன் விரிவு, வேங்கைவாசல், சென்னை – 600 073–ல் உள்ள 569 சதுர அடி பிளாட் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். சர்வே எண்.26/2, பட்டா எண்.3898, பட்டா எண்.26/2சி, வேங்கைவாசல் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், எல்லைகள் வருமாறு: வடக்கு : மனை எண்.பி–2, தெற்கு : எம். மேகநாதனுக்கு சொந்தமான மீதி நிலம், கிழக்கு : வினாயகம் மற்றும் மாணிக்கத்திற்கு சொந்தமான நிலம், மேற்கு : 24 அடி சாலை.

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. சூர்யா பெரியசாமி (+91 9600222111), திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248), திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9884718338) & திரு. ராஜேந்திர தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank-auctions.html and/or on https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை
தேதி: 18.05.2023

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

படிவம் WIN 6
(விதி 7ஐ பார்க்க)
தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் சென்னை அமர்வு முன்பாக
சன்பிரீம் சோலார் இந்தியா பிரைவேட் லிமிடெட் விஷயத்தில்
நிறுவனங்கள் சட்டம், 1956ன் கீழ் இணைக்கப்பட்ட நிறுவனம்
மனு எண் CP/61(CHE)/2017

சன்பிரீம் லிமிடெட்டின் பங்குதாரராக திரு. அயன் யடிகரோக்லு, அதன் பிஓஏ திருமதி வைதேஹி கிருஷ்ணமூர்த்தியால் மனுதாரராக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டார்.

மனுவின் விளம்பரம்

சன்பிரீம் லிமிடெட்டின் பிஓஏ திருமதி வைதேஹி கிருஷ்ணமூர்த்தியால் மனுதாரராக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட பங்குதாரர் திரு. அயன் யடிகரோக்லு, பிளாட் எண். சி–2, சுதர்மா அபார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.98/99, ஏ.கே. சாமி நகர் முதல் தெரு, கீழ்பாக்கம், சென்னை – 600 010 அவர்களால் சென்னையில் உள்ள தீர்ப்பாயத்தால் M/s. சன்பிரீம் சோலார் இந்தியா பிரைவேட் லிமிடெட்டை மூடுவதற்கான மனு 24 மே, 2022 அன்று மேற்கூறிய தீர்ப்பாயத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது என்றும் மேலும் அந்த மனு 9 ஆகஸ்ட், 2023 அன்று தீர்ப்பாயத்தின் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.மேற்படி மனுவின் மீதான உத்தரவை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் எந்தவொரு பங்களிப்பாளரும் அல்லது பிற நபர்களும் அதனை அவரோ அல்லது அவரது பிரதிநிதியோ பெயர் மற்றும் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்டு மனுவின் மீது விசாரணை நடப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்குவந்து சேருமாறு அனுப்ப வேண்டும் மற்றும் விசாரணையின்போது அவரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் ஆஜராக வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்தும் போது, கீழே கையொப்பமிடப்பட்டவரால் எந்தவொரு கடனாளி அல்லது பங்களிப்பாளருக்கும் மனுவின் நகல் வழங்கப்படும். மனுவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் எந்தவொரு பிரமாணப் பத்திரமும் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் மற்றும் விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னதாக மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு நகல் வழங்கப்பட வேண்டும்.

திரு. வெள்ளி பரமசிவம்
என்சிஎல்டி –ஆல் நியமிக்கப்பட்ட தற்காலிக கலைப்பாளர்
சென்னை

NOTICE FOR LOSS OF SHARE CERTIFICATE OF M/S.KINGFA SCIENCE AND TECHNOLOGY (INDIA) LTD.

(Formerly known as Hydro S & S Industries Ltd.)
(FOR CLAIM FROM IEPF AUTHORITY)

Notice is hereby given that the following Share Certificates of M/s **Kingfa Science & Technology (India) Ltd. (formerly known as Hydro S & S Industries Ltd.)** have been lost and the shareholder **MR. LATIN M. SHAH** is in process of applying to Investor Education and Protection Fund (IEPF) Authority for refund of the shares and dividends transferred to IEPF

Folio No.	Name of the shareholder	No. of Shares	Share Certificate No.	Distinctive No. From	Distinctive No. To
L00081	**LATIN M. SHAH**	100	15896	2287948	2288047
L00081	**LATIN M. SHAH**	400	19210 - 19213	2578666	2579065
L00081	**LATIN M. SHAH**	100	24798	3080135	3080234
L00081	**LATIN M. SHAH**	100	4783	877911	878010
L00081	**LATIN M. SHAH**	100	5105	910111	910210
L00081	**LATIN M. SHAH**	200	5545 - 5546	954111	954310
L00081	**LATIN M. SHAH**	100	664	66231	66330

This notice is being issued as per Schedule III of the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2017, as amended from time to time.

The public are hereby warned against purchasing or dealing in any way, with the above share certificates. Any person(s) who has/have any claim in respect of the said share certificate(s) should lodge such claim with evidence to the Company, **Kingfa Science & Technology (India) Ltd. (formerly known as Hydro S & S Industries Ltd.)** at its Registered Office Dhun Building, 3rd Floor, 827, Anna Salai, Chennai, Tamil Nadu, 600002, (email Id: secretarial@kingfaindia.com) or to its Share Transfer Agents, Integrated Registry Management Services Private Limited, "Kences Tower", 2nd Floor, No.1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai – 600017, (email id: yuvraj@integratedindia.in) within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the shareholder will apply to IEPF for refund of shares and dividends, Any person dealing with the above said shares will be doing so at their own risk.

LATIN MANHARLAL SHAH
21-22, Swastik Building, Plot No. 8, N.S. Road No. 1.
J V P D Scheme Juhu, VileParle, West, Mumbai, Maharashtra - 400056
Date: 18/05/2023
Place: Tamil Nadu

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் ஆகிய மூ. புவனேஸ்வரி க/பெ சி. முனுசாமி, (ஆதார் எண்: 7764 4602 5695) இவருக்கு சொந்தமான அசல் ஆவணம் பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 27/01/2010ஆம் தேதியன்று பதியப்பெற்ற கிரய ஆவணம் எண் 362/2010 ஆகியவை கடந்த 11/04/2023 அன்று சென்னை கிண்டியில் அருகிலுள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்துக் கொண்டு சென்ற போது தொலைந்து விட்டது இதை கண்டெடுப்பவர் எனது முகவரியில் ஒப்படைக்கவும். மேல்படி இந்த ஆவணத்தை கொண்டு எவரேனும் தவறான முறையில் பயன்படுத்தினால் எனது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது.

மு.புவனேஸ்வரி
8939699938

R. ஸ்டீபன்
வழக்கறிஞர்
9600046017

பொது அறிவிப்பு

சென்னை – 600091, மடிப்பாக்கம், ராம் நகர் தெற்கு, 2வது தெரு ராஜாஜி நகர், எண்.93, எனும் விலாசத்தில் வசிக்கும் லேட் திரு.N.கிருஷ்ணமூர்த்தி, அவர்களின் மகளும், திரு.S.சுப்பையன் அவர்களின் மனைவியுமான சுமார் 60 வயதுடைய திருமதி. S. ரமாதேவி எனும் எனது கட்சிக்காரரின் சார்பாக அறிவிப்பு என்னவெனில்

கீழ்காணும் சொத்துவிவரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்திற்கு உரிமையாளர்களில் ஒருவரான என் கட்சிக்காரரின் சொத்தின் பத்திரமான 1975ம் வருடம் டிசம்பர் மாதம் 5ம் தேதியிட்ட, தியாகராயநகர் சார்பதிவகத்தில் 1வது புத்தகம், தொகுதி எண்.812, பக்க எண்.55 கொண்ட கிரைய ஆவண எண்.1493/1975 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரையப் பத்திரத்தின் அசல் கடந்த 23.04.2023 அன்று சென்னை கிண்டி பேருந்து நிலையம் அருகில் காணாமல் போய்விட்டது. எனவே மேற்படி ஆவணம் எவரிடமாவது கிடைக்கப்பெற்றாலோ, மேற்படி சொத்தின் மீது எவருக்கேனும் எந்தவிதமான உரிமையோ பாத்தியமோ இருந்தால், அது சம்பந்தமான ஆவண ஆதாரங்களுடன் எழுத்து மூலமாக கீழ்காணும் முகவரிக்கு இந்த அறிவிப்பு வெளியிட்ட ஏழு நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. தவறும்பட்சத்தில் கீழ்காணும் சொத்தின் மீது யாருக்கும் எந்தவிதமான உரிமையும் பாத்தியதையும் இல்லையெனவும் அசல் ஆவணம் தொலைந்து போனதாகவும் கருதப்படும்.

சொத்து விவரம்

தென்சென்னைபதிவு மாவட்டம், தியாகராய நகர் சார் பதிவகம், தியாகராய நகர் கிராமத்தில் கிருஷ்ணாராவ் நாயுடு தெரு, எண்.7 (தற்போது 7B) எனும் விலாசம் கொண்ட T.S.No.6530, விஸ்தீரணம் 2 கிரவுண்டு 1900 சதுரடி (மொத்தம் 6700 சதுரடி) கொண்ட, மனைக்கு நான்கெல்லை விவரம் : வடக்கில் – ப்ளாட் எண்.4 & 5, கிழக்கில் – வேதாச்சல முதலியார் வீடு, தெற்கு – கிருஷ்ணராவ் நாயுடு தெரு, மேற்கு – கதவு எண்.7.

G. சதீஷ் B.Com.,B.L., வழக்குரைஞர்,
எண்.52, 10வது அவென்யூ, அசோக் நகர்,
சென்னை – 600083, செல் : 9344009337

பொது அறிவிப்பு

சென்னை–600 075, பம்மல், பசும்பொன் நகர், ஆர்.வி.சுப்பிரமணியன் தெரு, எண்.17, என்ற முகவரியில் வசித்து வரும் திரு.சிவாஜி அவர்களின் குமாரர் சுமார் 33 வயதுள்ள பாலாஜி சிவாஜி (ஆதார் எண்.2288 4803 2574), இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில், மனுதாரர் ஆகிய நான் எனது தாத்தா திரு.T.தட்சிணாமூர்த்தி, அவர்களின் பெயரில் நாகப்பட்டினம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 1) கிரைய பத்திரம் எண்.1053/1957, 2) கிரைய பத்திரம் எண்.1022/1961, 3) கிரைய பத்திரம் எண்.1632/1963, 4) கிரைய பத்திரம் எண்.2270/1966, 5) பரிவர்த்தனை பத்திரம் எண்.1601/1974, 6) கிரைய பத்திரம் எண். 296/1981, ஆகிய 01 முதல் 06 முடிய உள்ள இடங்களை மனுதாரர் பெயருக்கு சென்னை புரசைவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.55/1992, நாள்.22/04/1992, புத்தகம் 3ன் படி உயில் ஆவணமாக எழுதி வைத்துள்ளதாகவும், இந்த இடங்களை மனுதாரர் ஆண்டு அனுபவித்து வந்த நிலையில் 15/3/2023ம் தேதி மாலை 4.00 மணியளவில் நண்பர் ஒருவரை சந்தித்துவிட்டு, கிண்டி ஈக்காட்டுத்தாங்கல் ரோட்டில் உள்ள Xerox கடைக்கு நகல் எடுக்க சென்று பார்த்தபோது தாத்தா எழுதி கொடுத்த உயில் ஆவணத்தை மட்டும் காணவில்லை தொலைந்துபோய் விட்டது. மேலும் நான் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை.

ஆகவே மேற்படி உயில் பத்திரத்தை யாரேனும் கண்டெடுத்தால், எனது கைப்பேசி எண்.98405 40556, எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்புகொண்டு திரும்ப தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பாலாஜி சிவாஜி
எண்.17, ஆர்வி சுப்பிரமணியன் தெரு
பசும்பொன் நகர், பம்மல், சென்னை–600 075.
கைப்பேசி–98405 40556.

ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்

ramco

பதிவு அலுவலகம்: 47, பிஎஸ்கே நகர், ராஜபாளையம்–626 108.
கார்ப்பரேட் அலுவலகம்: 64, சர்தார் பட்டேல் ரோடு, தரமணி, சென்னை–600 113.
CIN: L72300TN1997PLC037550 E-mail : InvestorRelations@ramco.com Website: www.ramco.com

மார்ச் 31, 2023–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

	விவரங்கள்	முடிந்த காலாண்டு						முடிந்த ஆண்டு			
		மார்ச் 31, 2023		டிசம்பர் 31, 2022		மார்ச் 31, 2022		மார்ச் 31, 2023		மார்ச் 31, 2022	
		தணிக்கையானது (குறிப்பை பார்க்க)		தணிக்கையாகாதது		தணிக்கையானது (குறிப்பை பார்க்க)		தணிக்கையானது			
		Rs. Mln.	USD Mln.	Rs. Mln.	USD Mln.	Rs. Mln.	USD Mln.	Rs. Mln.	USD Mln.	Rs. Mln.	USD Mln.
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	1,282.68	15.68	1,287.41	15.82	1,252.41	16.77	4,977.32	62.48	5,403.77	73.18
2.	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு அயிட்டத்திற்கு முன்)	(569.58)	(6.96)	(514.39)	(6.29)	(290.49)	(3.91)	(2,206.75)	(27.70)	(733.07)	(9.93)
3.	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டத்திற்கு பின்)	(569.58)	(6.96)	(514.39)	(6.29)	(290.49)	(3.91)	(2,206.75)	(27.70)	(733.07)	(9.93)
4.	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டத்திற்கு பின்)	(454.03)	(5.52)	(502.98)	(6.15)	(264.50)	(3.56)	(2,068.59)	(25.97)	(729.30)	(9.88)
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்) உள்ளடக்கியது)	(481.45)	(5.52)	(542.43)	(7.46)	(275.65)	(5.05)	(1,976.01)	(30.33)	(709.52)	(12.10)
6.	சம பங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/–)	352.63	6.62	308.54	6.08	308.49	6.08	352.63	6.62	308.49	6.08
7.	நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள ரிசர்வுகள் (மறுமதிப்பீடு நீங்கலான ரிசர்வுகள்)							4,978.79	58.59	5,497.69	71.03
8.	காலத்திற்கான ஒரு பங்கு சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டத்திற்கு முன் மற்றும் பின்) ரூபாய் மற்றும் அமெரிக்க டாலரில் ஒவ்வொன்றும் ரூ.10 (வருடாந்திரம் ஆண்டு கணக்கிற்கு மட்டும்)										
	அடிப்படை	(14.45)	(0.18)	(16.31)	(0.20)	(8.58)	(0.12)	(65.60)	(0.82)	(23.87)	(0.32)
	பலமிழந்தது	(14.45)	(0.18)	(16.31)	(0.20)	(8.58)	(0.12)	(65.60)	(0.82)	(23.87)	(0.32)

குறிப்புகள்:

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் கம்பெனியின் இணையதளம் www.ramco.com மற்றும் பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் என்எஸ்இ இணையதளம் www.nseindia.com–ல் உள்ளது.
2. ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட், இந்தியா (''கம்பெனி''), அதன் துணை நிறுவனங்கள் (ஒன்றாக 'குழு' என்று குறிப்பிடப்படுகிறது) மற்றும் அதன் அசோசியேட்டின் மேற்கண்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு மே 17, 2023 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. பொருந்தகூடிய விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தர நிலைகள் (இன்ட் ஏஎஸ்)ன் படி ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குழுமத்தின் மார்ச் 31, 2023ல் முடிந்த ஆண்டுக்கான ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளை சட்ட தணிக்கையாளர்கள் தணிக்கை மேற்கொண்டு அவர்களது மாற்றப்படாத ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளனர்.
3. மார்ச் 31, 2023–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான கம்பெனியின் தனியான நிதிநிலை முடிவுகளின் முக்கிய விவரம்

ரூ. மில்லியனில்

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு	
	மார்ச் 31, 2023	டிசம்பர் 31, 2022	மார்ச் 31, 2022	மார்ச் 31, 2023	மார்ச் 31, 2022
	தணிக்கையானது (குறிப்பை பார்க்க)	(தணிக்கையாகாதது)	தணிக்கையானது (குறிப்பை பார்க்க)	தணிக்கையானது	
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	649.55	672.68	733.34	2,538.57	2,900.08
வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்)	(342.50)	(278.83)	(189.44)	(1,261.50)	(583.62)
வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்)	(244.80)	(264.91)	(155.53)	(1,130.05)	(499.71)
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்குப் பின்) உள்ளடக்கியது)	(266.20)	(278.75)	(169.41)	(1,187.91)	(517.50)

4. நடப்பு கால ஒப்பீடு நோக்கீட்டிற்காக எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கடந்த கால கணக்குள் மறுவகைப்படுத்தப்பட்டு மற்றும் திரும்ப எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மார்ச் 31, 2023 மற்றும் 2022ல் முடிந்த காலாண்டுக்கான முடிவுகள் முழு நிதி ஆண்டுகளுக்கான தணிக்கையான முடிவுகள் மற்றும் நிதி ஆண்டுகளின் மூன்றாவது காலாண்டுக்கான வெளியிடப்பட்ட கணக்குகள் இடையே சமன் செய்யப்பட்டவையாகும்.

இயக்குனர்கள் குழு உத்தரவுப்படி
ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்டிற்காக
P.R. வெங்கட்ராம ராஜா
சேர்மன்

இடம்: சென்னை
தேதி : மே 17, 2023